**ALAGAPPA UNIVERSITY**

(Reaccredited with 'A+ ' Grade by NAAC)

**KARAIKUDI**

---

Date: 02.05.2017

**A+ GRADE TO ALAGAPPA UNIVERSITY BY NAAC**

The Alagappa University, Karaikudi, has been awarded prestigious 'A+' Grade by the National Assessment and Accreditation Council (NAAC) in the third cycle of accreditation for a further period of seven years, said Prof. S. Subbiah, Vice-Chancellor, Alagappa University. The result has been declared at the 24$^{th}$ meeting of the Standing Committee of the NAAC held on 2.5.2017.

Graded with a Cumulative Grade Point Average (CGPA) of 3.64 out of 4, Alagappa University has been lauded for periodical updation of teaching, learning and infrastructural resources of the University. He said that Alagappa University is the first State University in Tamil Nadu to obtain "A+" grade.

The NAAC Peer Team assessed the performance of various departments, centres, common facilities and cells, etc. in respect of curricular aspects, teaching, learning and evaluation, research, consultancy and extension, infrastructure and learning resources, student support and progression, governance and leadership, innovative practices, etc.

The Vice-Chancellor expressing his happiness over the achievement, thanked the members of the Syndicate, Senate, Faculty Members, Officials, Administrative Staff, Students, Alumni, Parents, former Vice-Chancellors, Press and well-wishers of Alagappa University for their whole-hearted co-operation in achieving this great accomplishment.

The Peer Team which visited the University from 10$^{th}$ to 12$^{th}$ April, 2017 consisted of eight members headed by Prof. Nageshwar Rao, Vice-Chancellor, Uttarakhand Open University, Haldwani; and the other members were Dr. P.S.Grover, Guru Gobind Singh Indraprastha University, Prof. Dr. D.K.Maheshwari, Gurukul Kangri University, Prof. R.G. Sonkawade, Shivaji University, Dr. Dilip S. Patil, University of Mumbai, Prof. Sanjai Bhatt, University of Delhi, Prof. Asha Shukla, Barkatullah University and Dr.J.K.Tandon, University of Rajasthan.

Prof. V. Balachandran

Registrar i/c.

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறுதரமதிப்பீட்டிலும் "ஏ+" தகுதி பெற்றது)

---

நாள் : 2-5-2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணயக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு பெருமைமிகு "A+" கிரேடு அந்தஸ்தை மேலும் ஏழு ஆண்டுகளுக்கு பெற்றுள்ளது. அதிகப்பட்ச புள்ளியான நான்கில் 3.64 புள்ளிகளை அழகப்பா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது என்றும், தமிழ்நாடு மாநில பல்கலைக்கழகங்களில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமே முதல் முறையாக "A+" கிரேடு தகுதியைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தெரிவித்தார்.

2-5-2017 அன்று நடைபெற்ற தேசிய தர நிர்ணயக் குழுவின் 24-வது நிலைக்குழு கூட்டத்தில் மூன்றாவது சுழற்சியில் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு "A+" கிரேடு தகுதி வழங்கப்பட்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தர நிர்ணயக் குழு மூன்றாவது முறையாக அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு கடந்த ஏப்ரல் 10 முதல் 12 வரை வருகைப்புரிந்தது. இக்குழுவினர் கடந்த ஐந்து ஆண்டுகளில் கற்றல், கற்பித்தல் உக்திகள், விரிவாக்கம், நிர்வாகம், ஆய்வு மற்றும் அறிவாற்றல், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளாக மேம்பாடு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை மதிப்பீடு செய்தனர். அதன் அடிப்படையில் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு "A+" கிரேடு தகுதி வழங்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு "A+" கிரேடு தகுதி கிடைத்தது குறித்து தன்னுடைய மகிழ்ச்சியை ஆட்சிக்குழு உறுப்பினர்கள், ஆட்சிப் பேரவை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நிர்வாக அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார். மேலும் முன்னாள் துணைவேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழக வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரது பங்களிப்பினையும் நினைவு கூர்ந்தார்.

உத்தரகண்ட் திறந்த நிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. நாகேஸ்வர் ராவ் அவர்கள் தலைமையின் கீழ் பேராசிரியர்கள் பி.எஸ். குரோவர், குரு கோபிந்த் சிங் இந்திரபிரஸ்தா பல்கலைக்கழகம், டெல்லி, டி.கே. மகேஸ்வரி, குருகுல் காங்கிரி பல்கலைக்கழகம், ஹர்த்வார், ஆர்.ஜி. சோன்காவாடே, சிவாஜி பல்கலைக்கழகம், கொல்காபூர், திலீப் எஸ். பாட்டீல், மும்பை பல்கலைக்கழகம், சஞ்சய் பட், டெல்லி பல்கலைக்கழகம், டெல்லி, ஆஷா சுக்லா, பர்கதுல்லா பல்கலைக்கழகம், போபால், ஜெ.கே. டண்டன், முன்னாள் வணிகவியல் துறைப் பேராசிரியர், ராஜஸ்தான் பல்கலைக்கழகம், ஆகியோர் வருகை தந்து ஆய்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

பேரா.வி.பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)